RefNo. GR | 10 |2013

# ஆயர் கடிதம்

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே, சகோதரர் சகோதரிகளே,

நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் சமாதானமும் உரித்தாகுக.

திருச்சபை ஜூலை 3 ஆம் தேதி அன்று மார்த் தோமாவின் நினைவு நாளான '**துக்ரானா**' திருநாளைச் சிறப்பிக்கிறது. திருத்தூதரான மார்த்தோமா வழியாக நாம் பெற்ற விசுவாச வாழ்வைக் குறித்து தியானிக்கவும், நினைவுப்படுத்தவும் கொண்டாடவும் இத்திருநாள் நமக்குத் தரப்பட்டுள்ளது. அன்றாடம் புதுப்பிக்கபட வேண்டிய உண்மையே நாம் பெற்றுள்ள விசுவாசம். உலகளாவிய கத்தோலிக்கத் திருச்சபை அனுசரிக்கும் விசுவாச ஆண்டும் இதையே நமக்கு உணர்த்துகிறது. விசுவாச ஆண்டை கொண்டாடும் இத்தருணத்தில் நமது விசுவாச வாழ்வை ஆழப்படுத்தவும், அதன் அடிப்படையில் மாற்றங்களை ஏற்படுத்தவும் இத்திருநாள் நம்மை அழைக்கிறது.

பிரான்சிஸ் என்னும் திருத்தந்தையை நமக்கு கடவுள் அளித்து நம்மை ஏராளமாக ஆசீர்வதித்திருக்கிறார். இறைமக்களாக திருச்சபையில் நாம் சமூக உறவோடு வாழ வேண்டும் என்றும் எளிய வாழ்வை மேற்கொண்டு இரக்கமுடையவர்களாய் இயேசுவை மையமாகக் கொண்ட வாழ்வு வாழவும் திருத்தந்தை நிரந்தரமாக அறிவுறுத்துகிறார்.

இந்தியத் திருச்சபை மீது ஆண்டவராகிய கடவுள் பொழிந்துள்ள அனைத்து நன்மைகளுக்கும் குறிப்பாக சீரோ மலபார்த் திருச்சபை மீது பொழிந்துள்ள நன்மைகளுக்காக நன்றி செலுத்துவோம். காலத்தின் அறைகூவலுக்கு செவிமடுத்து விசுவாசம் சமூகத்தில் வாழ்வாக்க நாம் அழைக்கப்படுகிறோம். துக்ரான திருநாள் செயல்பாட்டிற்கான புதியத் தளங்களை இனம் காண அழைக்கிறது. நமது தனிப்பட்ட வாழ்வையும் குடும்ப வாழ்வையும் மதிப்பீடு செய்து இன்றைய உளகிற்கு ஏற்றவாறு அதை நாம் அமைத்துக்கொள்ள அழைக்கப்படுகிறோம். முதல் நூற்றாண்டில் மார்த்தோமா செய்ததைப் போன்று நற்செய்தியை அறிவிக்கவும் சிறு சமூகங்களை உருவாக்கவும் கிறிஸ்தவ வாழ்வு நம்மைப் பணிக்கிறது. துக்ரான திருநாளன்று, திருச்சபையை கட்டியெழுப்பவும் புதிய சமூகத்தை அதன் அடிப்படையில் உருவாக்கவும் உறுதி கொள்வோம்.

தீரமுடன் மார்த்தோமா இயேசுவிடம் ஐயம் எழுப்பியதின் விளைவாகவே, "நானே வழியும் உண்மையும் வாழ்வும் (யோவா 14: 6). என்னும் இறைவெளிபாடை நாம் பெற்றோம். இயேசு வழியாக கடவுளை அடைவதற்கான வழியாக இந்தியர்களுக்கு முதன்முறையாக கற்பித்தவர் மார்த்தோமாவே. அவர் வாய் மொழியாக கிறிஸ்தவ வாழ்வு முறைமையை நாம் பெற்றோம். அதை நாம் 'மார்த்தோமா மார்கம்' என்கிறோம். கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை, விசுவாச வாழ்வு என்பது கிறிஸ்துவில் நாம் கொள்ளும் வாழ்வே. இயேசுவோடு ஒவ்வொரு கிறிஸ்தவனும் இணைய வேண்டும். சிலுவையில் அறையுண்ட போது இயேசு சிலுவையில் தொங்கியவாறு பின்வருமாறு செபித்தார், "தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது இன்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" (லூக்கா 23: 34). நாம் நமது அறிவின்மையால் இன்று செய்கின்ற ஒவ்வொரு பாவங்களும் சமூகத்தில் உள்ள பிறரை பாதிக்கிறது. மார்த்தோமை கிறிஸ்தவர்கள் தாங்கள் மேற்கொள்ளும் பணிகளை செப உணர்வுடன் மேற்கொள்ள வேண்டும் அப்போது, பல கிறிஸ்தவ சமூகங்கள் ஒன்றிப்புக்கு வருகின்ற வாய்ப்பு பிறக்கும். கிறிஸ்தவ

*சபைகளின் ஒன்றிப்பிற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் நாம் தாராள மனதுடன் பங்கேற்போம். நாம் மிக்க விழிப்புடன் சபைகளுக்கு இடையே சமூக உறவு ஏற்பட உழைக்க வேண்டும். "ஒரே இதயத்தையும் ஒரே நெறிமுறையையும் நான் அவர்களுக்குக் கொடுப்பேன்" (எரேமியா 32: 39) என்னும் எரேமியாவின் இறைவாக்கு நிறைவேற வேண்டும்.*

*துக்கரான திருநாளை நாம் சபைநாளாக அனுசரிக்கிறோம். அன்றைய நாள் சீரோ மலபார்த் திருச்சபையின் அனைத்து பிள்ளைகளும் பங்குகளில் கருத்துப்பரிமாற்றத்திற்காகவும், செயல்திட்டங்களை மேற்கொள்வதற்காகவும் பல நிகழ்வுகளை பங்கு தளத்தில் ஏற்பாடு செய்ய வேண்டும். நமது சபை நற்செய்தி அறிவிப்புக்காக மேற்கொள்ளும் முயற்சிகளில் இயன்ற அளவு நாம் அனைவரும் பங்கேற்க வேண்டும்.*

*நமது மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்காகவும் நற்செய்திப் பணிக்காகவும் முயற்சிகளை மேற்கொள்ளும் அனைத்து அருட்தந்தையருக்கும் கன்னியருக்கும் பொதுநிலையினருக்கும் இவ்வேளையில் நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன். மார்த்தோமாவின் முன்மாதிரியைப் பின்பற்றி இயேசுவை அறிவிப்பது நமது தனிப்பட்ட கடமையாகும்.*
*மே மாதத்தில் பல பங்குகளிலும் தந்தையர்கள் மாற்றப்பட்டு புதிய தந்தையர்கள் கிடைக்கப்பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும கடவுள் தந்த வரப்பிரசாதமாக நாம் ஏற்க வேண்டும். அவர்கள் தங்களது குடும்பத்தையும் தாய் தந்தையையும் சொந்த பந்தங்களையும் ஊரையும் விட்டு விட்டு நமக்காக பணி செய்ய வந்திருக்கிறார்கள். அவர்கள் தக்கலை மறைமாவட்டத்தை தாய்மண்ணாக ஏற்று, பங்குகளை குடும்பமாக மாற்றி உங்கள் ஒவ்வொருவரையும் தங்களது உற்றார் உறவினர்களாக இதயத்தில் சுமப்பவர்கள். அதனால் அவர்களுக்காக நாம் இறைவனிடம் செபிப்பது நம்மிடம் சுமத்தப்பட்டிருக்கும் கடமையாகும். அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்கவும் உற்சாகப்படுத்தவும் கடமைப்பட்டுள்ளோம். அவர்கள் நமக்காக தங்கள் வாழ்வோடு இணைத்து பலி ஒப்புக்கொடுக்கிறார்கள். வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமெனில் அவர்கள் நமது குடும்பங்களுக்காக இறை ஆசீரைப் பெற்றுத் தருகிறார்கள். ஒவ்வொரும் அன்பில் நிலைத்து அமைதியிலும் சகோதரத்துவத்திலும் வாழ்ந்து பங்கு சமூகத்தை ஒரு விசாலமான குடும்பமாக மாற்ற நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன்.*

*நமது மறைமாவட்டத்தின் முன்னாள் பொருளர் தந்தை தோமஸ் தெக்கேல், அவர்கள் புற்றுநோயால் அவதியுறுகிறார். அவருக்கு முழு நலன் கிடைக்க செபிக்க நான் உங்களை வேணடுகிறேன். வெவ்வேறு கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் படிக்கும் மாணவர்களுக்காக நாம் சிறப்பாக செபிப்போம். அவர்களை கடவுள் ஆசீர்வதிப்பாராக.*

*விசுவாசத்திலும் ஒழுக்க நெறியிலும் வேரூன்றப்பட்டவர்களாய், தனித்திருச்சபையில் வளர்ந்து உலகளாவிய சபையின் உறுப்பினர்களாக உயர்வோம்.*

*தந்தை மகன் தூய ஆவியாம் கடவுள் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.*

*ஈசோவில் அன்புடன்*

***மார் ஜார்ஜ் இராஜேந்திரன்***
***ஆயர், தக்கலை மறைமாவட்டம்***

*தக்கலை*
*22.06.2013*

**இச்சுற்றுமடலை 2013 ஜூன் 30 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை திருப்பலியின் இறுதியில் வாசிக்கவும்.**